# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–600 006.

## கையேடு

### அட்டவணை


| வ.எண். | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | அமைப்பு | 1 |
| 2. | வாரியத்தின் செயல்பாடுகள் | 2 |
| 3. | தொழிலாளர் நல நிதி | 2–3 |
| 4. | வாரியத்தின் அமைப்பு | 3 |
| 5. | வாரிய உறுப்பினர்கள் விவரம் | 4 |
| 6. | தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மற்றும் விதிகள் | 4 |
| 7. | நலத் திட்டங்கள் | 5–8 |
| 8. | நிர்வாகம் | 8–10 |
| 9. | பொதுத் தகவல் அதிகாரி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரி | 10 |
| 10. | நலத்திட்டங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் | 11–33 |

## 1. அமைப்பு.—

தமிழ்நாடு அரசு 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தை (அரசாணை எண். 222, தொழிலாளர் துறை, நாள். 20.2.1971) தொழிலாளர்களுக்கும், அவரைச் சார்ந்தோரின் நலனை மேம்படுத்தவும் ரூ. 5 லட்சம் நிதி உதவியுடன் இந்த வாரியம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம் 1972 அரசால் சட்டம் இயற்றப்பட்டு 1.1.1973 முதல் அமுலுக்கு வந்தது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் சட்டப்பூர்வமாக 1.4.1975 முதல் தொழிலாளர் நல அமைச்சரை தலைவராகவும், வேலையளிப்பவர் பிரதிநிதிகள் ஐவர், தொழிலாளர் பிரதிநிதிகள் ஐவர், சட்டமன்ற உறுப்பினர்கள் மூவர், அரசு சார்புள்ள உறுப்பினர்கள் நால்வர், அரசு சார்பற்ற உறுப்பினர்கள் இருவர் ஆகியோருடன் தொடங்கப்பட்டது.

## 2. வாரியத்தின் செயல்பாடுகள்.

தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் சில முக்கிய அம்சங்கள்.

- தொழிலாளர் நல நிதி வசூல்
- தொழிலாளர் நல நிதியினை பராமரித்தலும் உபயோகித்தலும்
- தொழிலாளர் நல வாரியத்தின் அமைப்பு
- வாரிய உறுப்பினர்களின் பதவிக்காலம்
- குழு நியமித்தலுக்கான அதிகாரம்
- வாரியத்தின் நடவடிக்கைகள்
- கொடுபடாத்தொகைகள்
- நிதி முதலீடு
- சட்டமன்றத்தில் வாரியத்தின் நிதி நிலை அறிக்கையினை சமர்ப்பித்தல்
- விதிகள் மற்றும் வரண்முறைகளை உருவாக்கும் அதிகாரம்

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்ட விதிகள் 1973—ன் முக்கிய அம்சங்கள்.

- தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட அபராதத் தொகைகள் மற்றும் கொடுபடாத் தொகைகள் செலுத்துதல்
- தணிக்கை கணக்குகளை பராமரித்தல்
- வாரியத்தின் நிதி நிலை அறிக்கை
- கூடுதல் செலவினம்
- நல நிதி செலுத்தும் முறை
- நலநிதி பங்கு செலுத்துதல்
- வாரியக் கூட்டங்கள்
- வாரியக் கூட்டம் நடத்துவதற்கான நிர்ணயிக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கை உறுப்பினர்கள்.
- செயலாளரின் நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரங்கள்
- ஆண்டறிக்கை வெளியிடுதல்
- வேலையளிப்போர் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்.

படிவம்– ஏ – வாரியத்திற்கு செலுத்திய தொழிலாளர் நல நிதி பங்கிற்கான விவரம்
படிவம் –பி – சம்பளப் பதிவேடு
படிவம் –சி – அபராதம் மற்றும் கொடுபடாத் தொகைகள் குறித்த பதிவேடுகள்

**3. தொழிலாளர் நல நிதி.**

தொழிலாளர் நல நிதிச் சட்டப் பிரிவு (3)–ன்படி தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படும் இனங்கள்.

| | |
|---|---|
| அ) | தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய ஆனால் கொடுபடாத் தொகைகள் அனைத்தும் |
| ஆ) | தொழிலாளர்களிடமிருந்து வசூலித்த அபராதத் தொகை அனைத்தும் |
| இ) | 1936ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் பிரிவு 9(2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு36(2)ன்படி சம்பளத்திலிருந்து செய்யப்படும் பிடித்தம். |
| ஈ) | தொழிலாளர், வேலையளிப்பவர் மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் பங்குத் தொகை. |
| உ) | தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் கீழ் செலுத்திய அபராதத் தொகை மூலம் கிடைத்த வட்டி. |
| ஊ) | தாமே முன்வந்து அளிக்கின்ற நன்கொடை. |
| எ) | வாரியத்தின் நிதி அதிகாரத்தை பெருக்குவதற்கான ஏனைய நிதி ஆதாரங்களிலிருந்து வாரியம் வசூலித்த தொகை. |
| ஏ) | தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச்சட்டத்தின் 17–ஆம் பிரிவைச் சேர்ந்த ( 5)ஆம் உட்பிரிவின்படி மாற்றப்பட்ட நிதி |
| ஐ) | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் 18–ஆம் பிரிவின் கீழ் பெறப்படும் கடன் தொகை |
| ஒ) | 1936–ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டம், 1948–ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கு இணங்க அரசின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட ஆனால் கோரப்படாத் தொகை. |
| ஓ) | அரசு வழங்கிய மானியங்கள் அல்லது முன்பணங்கள் |
| ஔ) | தொழிலாளர் நலச் சட்ட விதிகளை மீறியதற்காக நீதிமன்றங்கள் விதித்த வேலையளிப்பவரிடமிருந்து வசூலித்த அனைத்து அபராதங்கள் இதில் நிர்வாகச் செலவுக்காக நீதிமன்றம் பிடித்தம் செய்த தொகை நீங்கலாக. |

**தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்களால் தொழிலாளர் நல நிதிக்கு அளிக்கப்படும் பங்குத் தொகை ( பிரிவு –15) மற்றும் விதிகள் 11 (ஏ)**

ஒவ்வொரு தொழிலாளியும் தன் பங்கிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.7/–ம், தொழிலதிபர் பங்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.14/–ம், அரசின் பங்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.7/–ம் செலுத்த வேண்டும். (Amendment to Tamilnadu Labour Welfare Fund Rules 1973 (G.O. Ms. No.91, Labour & Employment (G2) Department, date 10.07.2009).

**<u>தொழிலாளர் நல நிதி பங்குத் தொகை விகிதம்.</u>**

| வருடம் | தொழிலாளியின் பங்குத் தொகை | தொழிலதிபரின் பங்குத்தொகை | அரசின் பங்குத் தொகை | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அரசாணை எண். / நாள் |
|---|---|---|---|---|
| 1973–1981<br>9 வருடங்கள் | ரூ.1 | ரூ.2 | இல்லை | – |
| 1982–1995<br>14 வருடங்கள் | ரூ.2 | ரூ.4 | ரூ.2 | 1933 / 14.11.82. |
| 1996–1997<br>2 வருடங்கள் | ரூ.3 | ரூ.6 | ரூ.3 | 67 / 28.5.96 |
| 1998–2008<br>11 வருடங்கள் | ரூ.5 | ரூ.10 | ரூ.5 | 159 / 7.12.98 |
| 2009 முதல் | ரூ.7 | ரூ.14 | ரூ.7 | 91/10.07.2009 |

**<u>4. வாரியத்தின் அமைப்பு.–</u>**

1) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வாரியத் தலைவரையும் சேர்த்து 20 உறுப்பினர்களைக் கொண்டது. இவ்வாரியத்தின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைவர் ஆவார் மற்றும் கீழ்க்கண்ட உறுப்பினர்களை அரசு நியமிக்கும்.

அ. நிர்வாகத்தினரை கலந்து அவர்களின் சார்பாக 5 பிரதிநிதிகளை அரசு நியமிக்கும்.
ஆ. தொழிற்சங்கங்களை கலந்து அச்சங்கங்களின் சார்பாக 5 பிரதிநிதிகளை அரசு நியமிக்கும்.
இ. மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள்
ஈ. நான்கு அரசு சார்பு உறுப்பினர்கள்
உ. நியமன உறுப்பினர்கள் இருவர்

வாரிய உறுப்பினர்களில் பெண் உறுப்பினர்கள் இல்லாத பட்சத்தில் நியமன உறுப்பினர்கள் இருவரையும் பெண் உறுப்பினர்களாக நியமிக்க அரசு பரிசீலிக்கும்.

2) வாரிய தலைவர் வர இயலாத நேரங்களில் வாரியத் தலைவர் அவர்கள் பணியை மேற்கொள்ள வாரியம் ஒரு உப தலைவரை தேர்வு செய்யும்.
3) அரசு சார் உறுப்பினர்களைத் தவிர்த்து இதர வாரிய உறுப்பினர்களின் பதவிக் காலம் அவர் உறுப்பினராக நியமிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். அவர்களை மீண்டும் நியமனமோ அல்லது மறு நியமனமோ செய்யலாம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் அவர்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிக்காலம் முடியும்போதே வாரிய உறுப்பினர்களின் பதவிக் காலமும் முடிவுறும்.

## 5. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் விவரம்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு. சி.த. செல்லப்பாண்டியன்,<br>மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.** |
| அரசு சார்பு உறுப்பினர்கள் | 1) | அரசுச் செயலாளர்,<br>தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை–9. |
| | 2) | அரசுச் செயலாளர்,<br>நிதித் துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை–9. |
| | 3) | தொழிலாளர் ஆணையர்,<br>தேனாம்பேட்டை, சென்னை–6. |
| | 4) | தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வர்,<br>சேப்பாக்கம், சென்னை–5. |
| வேலையளிப்போர் பிரதிநிதிகள் | | ஐந்து உறுப்பினர்கள் |
| தொழிலாளர்களின் பிரதிநிதிகள் | | ஐந்து உறுப்பினர்கள் |
| சட்ட மன்ற உறுப்பினர்கள் | | மூன்று உறுப்பினர்கள் |
| பெண் நியமன உறுப்பினர்கள் | | இரண்டு உறுப்பினர்கள் |

## 6. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம் 1972 மற்றும் விதிகள் 1973

தமிழ்நாடு அரசு 1972 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை இயற்றியது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 4.9.1973ஆம் நாளிட்ட 569 ஆம் அரசாணை மற்றும் 8.10.73ஆம் நாளிட்ட 67520/எப்3/72–73 ஆம் எண் குறிப்பாணை ஆகியவை மூலம் தமிழ்நாடு அரசு 1973ஆம் ஆண்டு தொழிலாளர் நல விதிகளையும் வகுத்துள்ளது. இச்சட்டம் 1.1.1973 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத்தை மேம்படுத்துவதற்காகவும், அது தொடர்புடைய ஏனைய சில செயல்களுக்காகவும், தொழிலாளர் நல நிதி ஒன்றை ஏற்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது. 1948–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வருகின்ற தொழிற்சாலைகள், 1961 –ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள், 1951–ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் வருகின்ற மலைத் தோட்ட நிறுவனங்கள், 5 அல்லது அதற்கு மேல் தொழிலாளர்கள் பணி புரியும் 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவன சட்டத்தின் கீழ் வருகின்ற உணவு நிறுவனங்கள் மற்றும் 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தில் 2 (டி) (V) பிரிவில் விளக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் ஆகிய அனைத்திற்கும் இது பொருந்தும்.

## 7. நலத் திட்டங்கள்

வாரியத்திற்கு ஆண்டுதோறும் தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நலத்திட்டங்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நலத் திட்டங்களைத் துய்ப்பதற்கான தொழிலாளியின் மாதாந்திர ஊதிய உச்ச வரம்பு ரூ.15,000/– ஆகும்.

### 1. தொழிலாளர் நல மையங்கள்

தமிழகத்தில் 71 இடங்களில் தையற்பயிற்சி பிரிவு, குழந்தைகள் காப்பகப் பிரிவு மற்றும் படிப்பகங்கள் அடங்கிய தொழிலாளர் நல மையங்கள் செயல்பட்டு வருகிறது.

### அ) தையற்பயிற்சி மையங்கள்

தொழிலாளர்களின் மனைவி, திருமணமாகாத மகள் மற்றும் சகோதரிகள் தையற் பயிற்சியில் சேர தகுதியுடையவர்கள். இப்பயிற்சி ஜனவரி முதல் டிசம்பர் முடிய ஓராண்டு கால பயிற்சி ஆகும். பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ.150/= உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் இப்பயிற்சியாளர்கள் அரசு நடத்தும் தையல் தேர்விற்கு அனுப்பப்படுகின்றனர். அரசு தையற் தேர்வில் கீழ்நிலை / மேல்நிலையில் மையந்தோறும் முதல் மதிப்பெண் பெறும் ஒவ்வொரு மாணவிக்கும் தையல் இயந்திரம் பரிசு வழங்கப்படுகிறது.

### ஆ) பாலர் பள்ளிகள்

பாலர் பள்ளிகளில் தொழிலாளர்களின் 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். குழந்தைகளுக்கு தினமும் சத்தான மதிய உணவும், மாலையில் 150 மி.லி பாலும் வழங்கப்படுகிறது. வாரம் மூன்று முறை முட்டை மற்றும் இரண்டு முறை வாழைப்பழம் அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டுக்கு இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடைகள் இலவசமாக வழங்கப் படுகிறது. ஆண்டுதோறும் ஜுன் முதல் ஏப்ரல் வரை பாலர் பள்ளிகள் செயல்படுகிறது.

### இ) படிப்பகங்கள்

தொழிலாளர் நல மையப் படிப்பகங்களில் தொழிலாளர்கள் படித்து பயன்பெறுவதற்காக நாளிதழ்கள், வார இதழ்கள் உழைப்பவர் உலகம் மாத இதழ் வழங்கப்படுகின்றன.

### 2. கல்வி உதவித்தொகை

தொழிலாளர்களின் பிள்ளைகள் உயர்கல்வி பயிலுவதற்காக வாரியம் கீழ்கண்டவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பொறியியல் பட்டமேற்படிப்பு | ரூ.3000/– |
| 2 | மருத்துவப் பட்டமேற்படிப்பு | |
| 3 | சட்டப் பட்டமேற்படிப்பு | |
| 4 | விவசாயப் பட்டமேற்படிப்பு | |
| 5 | ஆசிரியர் பயிற்சி பட்டமேற்படிப்பு | |
| 6 | உடற்பயிற்சி பட்டமேற்படிப்பு | |
| 7 | பொறியியல் பட்டப்படிப்பு | |

| | | |
|---|---|---|
| 8 | மருத்துவப் பட்டப்படிப்பு | ரூ.2400/– |
| 9 | சட்டப் பட்டப்படிப்பு | |
| 10 | விவசாயப் பட்டப்படிப்பு | |
| 11 | ஆசிரியர் பயிற்சி பட்டக் கல்வி | |
| 12 | உடற்பயிற்சி பட்டக் கல்வி | |
| 13 | பொறியியல் பட்டயப்படிப்பு | ரூ.1440/– |
| 14 | மருத்துவப் பட்டயப்படிப்பு | |
| 15 | ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு | |
| 16 | உடற்பயிற்சி பட்டயக் கல்வி | |
| 17 | மேல்நிலைக் கல்வி | ரூ.1200/– |
| 18 | தொழிற்பயிற்சிக் கல்வி | ரூ.1000/– |

**3. கல்வி ஊக்கத்தொகை**

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10 மற்றும் 12–ம் வகுப்பு அரசு பொது தேர்வில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முதல் பரிசாக ரூ.1,000/= இரண்டாம் பரிசாக ரூ.500/= மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.250/= வழங்கப்படுகிறது.

**4. புத்தகம் வாங்க உதவித்தொகை**

தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடப் புத்தகங்கள் வாங்குவதற்காக வாரியத்தின்மூலம் கீழ்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | மேல்நிலைக் கல்வி | ரூ.180/– |
| 2 | பட்டயப் படிப்பு | ரூ.250/– |
| 3 | பட்டப் படிப்பு | ரூ.500/– |
| 4 | முதுகலைப் பட்டப் படிப்பு | ரூ.750/– |

**5. அடிப்படை கணினி பயிற்சி**

தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் அடிப்படை கணினி பயிற்சி பயில தலா ரூ.1000/– வீதம் மாவட்டத்திற்கு 5 பேருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**6. திருமண உதவித்தொகை**

சட்டப்படியான திருமண வயதை அடைந்த தொழிலாளி அல்லது அவர்தம் மகன்/ மகளுக்கு திருமண உதவித் தொகையாக ஆணாக இருப்பின் ரூ.3000/–ம் பெண்ணாக இருப்பின் ரூ.5000/–ம் பணிக்காலத்தில் ஒரு முறை மட்டும் வழங்கப்படுகிறது.

**7. மூக்கு கண்ணாடி உதவித்தொகை**

தொழிலாளர்கள் மூக்குக் கண்ணாடி வாங்கியதற்காக மருத்துவச் சான்றிதழ் பேரில் ரூ.500/= வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**8. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து உதவித்தொகை**

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து அரசுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உதவித்தொகையாக தட்டச்சு கீழ்நிலைக்கு ரூ.1000/–ம், தட்டச்சு

மேல்நிலைக்கு ரூ.600/–ம் சுருக்கெழுத்து கீழ்நிலை மற்றும் மேல்நிலைக்கு ரூ.1500/–ம் வழங்கப்படுகிறது.

**9. ஈமச்சடங்கு உதவித்தொகை**

தொழிலாளர் பணிக்காலத்தில் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கு செலவிற்காக அவரது வாரிசுதாரருக்கு ஈமச்சடங்கு உதவித்தொகையாக ரூ.2000/= வழங்கப்படுகிறது.

**10. காதுகேட்கும் கருவி, செயற்கை உறுப்பு மற்றும் மூன்று சக்கர வண்டி உதவித்தொகை.**

காது கேட்காத தொழிலாளர் மற்றும் அவர் தம் குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவி வாங்கியமைக்காக ரூ.1000/= வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது. அதேபோல் ஊனமுற்றோர்கள் செயற்கை உறுப்புகள் வாங்கியமைக்காக அரசு நிர்ணயித்த விலை உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. தவிர ஊனமுற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குழந்தைகளுக்கு மருத்துவச் சான்றிதழின்பேரில் மூன்று சக்கர வண்டிகளும் இலவசமாக வழங்கப்படுகிறது.

**11. காசநோய் தனிப்பிரிவு**

காசநோயால் அவதிப்படும் தொழிலாளர்கள் சிறந்த முறையில் சிகிச்சை பெற தாம்பரம் (சென்னை), ஆசாரிப்பள்ளம் (கன்னியாகுமரி), திருப்பூர் (கோவை), ஆஸ்டின்பட்டி (மதுரை) மற்றும் கீழ்பெண்ணாத்தூர் (வேலூர்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தனிப் பிரிவுகளை வாரியம் கட்டியுள்ளது.

**12. விடுமுறை இல்லங்கள்**

தொழிலாளர்கள் குடும்பத்துடன் சுற்றுலா சென்று தங்குவதற்காக மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்களை கட்டியுள்ளது.

1. மாமல்லபுரத்தில் 1988 முதல் ஜவஹர்லால் நேரு இல்லம் செயல்பட்டு வருகிறது. இங்கு ஒரே சமயத்தில் 44 பேர் தங்க படுக்கை வசதி செய்யப்பட்டுள்ளது.
2. குற்றாலத்தில் 1983 முதல் திரு.வி.க. இல்லம் செயல்பட்டு வருகிறது. இங்கு ஒரே சமயத்தில் 93 பேர் தங்க படுக்கை வசதி செய்யப்பட்டுள்ளது.
3. வால்பாறையில் 1987 முதல் சிங்காரவேலர் இல்லம் செயல்பட்டு வருகிறது. இங்கு ஒரே சமயத்தில் 30 பேர் தங்க படுக்கை வசதி செய்யப்பட்டுள்ளது.

<u>விடுமுறை இல்ல கட்டண விவரம்.</u>

| விடுமுறை இல்லம் | தொழிலாளர்களுக்கு | | பொதுமக்களுக்கு | |
|---|---|---|---|---|
| | இரு படுக்கை அறை | பொது அறை | இரு படுக்கை அறை | பொது அறை |
| மாமல்லபுரம் | 35/– | 20/– | 150/– | 75/– |
| வால்பாறை | 40/– | 20/– | 100/– | 75/– |
| குற்றாலம் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| சாதாரண காலம் | 30/– | 20/– | 100/– | 50/– |
| சாரல் காலம் | 35/– | 30/– | 150/– | 75/– |

**13. ஜீவா இல்லம்**

இணக்கப் பேச்சுவார்த்தைகள் மற்றும் தொழிலாளர் வழக்குகள் போன்றவைகளில் கலந்துகொள்வதற்காக, தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து சென்னைக்கு வரும் தொழிற்சங்க நிர்வாகிகள், குறைந்த வாடகையில் தங்குவதற்காக சென்னை, டி.எம்.எஸ். வளாகத்தில் ஜீவா இல்லம் எனும் ஒரு ஓய்வு இல்லம் கட்டப்பட்டு 1981 முதல் செயல்பட்டு வருகிறது.

**ஜீவா இல்ல கட்டண விவரம் ( தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு மட்டும் )**

| | |
|---|---|
| இரண்டு படுக்கை அறை | ரூ.40/– |
| பொது அறை | ரூ.30/– |

**14. உழைப்பவர் உலகம் மாத இதழ்**

“உழைப்பவர் உலகம்“ என்ற பெயரில் தொழிலாளர் நல மாத இதழ் ஒன்று இவ்வாரியத்தால் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இவ்விதழில் தொழிலாளர் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், சட்டத் திருத்தங்கள், வாசகர் கேள்வி பதில் போன்றவை இடம் பெறுகின்றன. இவ்விதழின் தனிப்பிரதி விலை ரூ.7/– ஆகும். இவ்விதழினை ஆண்டு சந்தா ரூ.80/= அல்லது ஆயுள் சந்தா ரூ.750/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**9. நிர்வாகம்.**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் அலுவலர் மற்றும் பணியாளர் பணியிடங்களாக மொத்தம் 412 பணியிடங்கள் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் விவரங்கள் பிரிவு வாரியாக கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|
| தொகுதி – ஏ | 2 |
| தொகுதி – பி | 20 |
| தொகுதி – சி | 218 |
| தொகுதி – டி | 172 |
| **மொத்தம்** | **412** |

**அனுமதிக்கப்பட்ட  அலுவலர் மற்றும் பணியாளர் பணியிடங்கள்.**

| வ. எண் | பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1. | செயலாளர் | 1 |
| 2. | நிதி ஆலோசகர் | 1 |
| 3. | நிர்வாக அலுவலர் | 1 |
| 4. | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 5. | இளநிலை பொறியாளர் | 1 |
| 6. | கண்காணிப்பாளர் | 2 |
| 7. | கணக்கர் | 5 |
| 8. | தொழிலாளர் உதவி ஆய்வர் (நலமையம்) | 9 |
| 9. | மொழிபெயர்ப்பாளர் மற்றும் பத்திரிகையாளர் | 1 |
| 10. | சுருக்கெழுத்து தட்டச்சர் –நிலை–2 | 1 |
| 11. | உதவியாளர் | 26 |
| 12. | நூலகர் | 1 |
| 13. | அமைப்பாளர் மற்றும் தையற்பயிற்சி ஆசிரியை நிலை–1 | 60 |
| 14. | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 | 1 |
| 15. | சுத்தநகல் உதவியாளர் | 1 |
| 16. | மின்பணியாளர் | 1 |
| 17. | இளநிலை உதவியாளர் | 18 |
| 18. | இளநிலை உதவியாளர் மற்றும் காசாளர் | 3 |
| 19. | வரவேற்பாளர் | 8 |
| 20. | ஒப்பச்சர் | 1 |
| 21. | தட்டச்சர் | 4 |
| 22. | ஓட்டுநர் | 1 |
| 23. | அமைப்பாளர் மற்றும் தையற்பயிற்சி ஆசிரியை நிலை–2 | 11 |
| 24. | பாலசேவிகா | 52 |
| 25. | குழாய் பணியாளர் | 1 |
| 26. | பதிவுரு எழுத்தர் | 23 |

| | | |
|---|---|---|
| 27. | மின்தூக்கி இயக்குபவர் | 5 |
| 28. | அலுவலக உதவியாளர் | 20 |
| 29. | அறைப்பணியாளர் | 18 |
| 30. | நடத்துனர் | 52 |
| 31. | தோட்டப் பணியாளர் | 1 |
| 32. | காவலர் | 80 |
| 33. | முழுநேர துப்புரவாளர் | 1 |
| | **மொத்தம்** | **412** |

**பொதுத் தகவல் அதிகாரி:-**

நிர்வாக அலுவலர்,
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்,
சென்னை–6.
தொலைபேசி எண். 2432 1542.

**மேல் முறையீட்டு அதிகாரி:-**

செயலாளர்,
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்,
சென்னை–6.
தொலைபேசி எண். 2432 1364.

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை—600 006.

**தமிழ்நாடு தொழிலாளர் நல மையத்தில் தையற் பயிற்சி வகுப்பில் சேர விண்ணப்பம்.**

| | | |
|---|---|---|
| 1 | மையத்தின் பெயரும் முகவரியும் | : |
| 2 | ஆண்டு | : |
| 3 | மனுதாரர் பெயர் செல்வி/திருமதி | : |
| 4 | தகப்பனார்/கணவர்/சகோதரர் பெயர் | : |
| 5 | முகவரி | : |
| 6 | தொழிலாளருடன் உறவுமுறை | : |
| 7 | பிறந்த தேதி<br>(சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : |
| 8 | கல்வி தகுதி<br>(சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : |
| 9 | பெற்றோர்/சகோதரர் அல்லது கணவரின் பெயரும், முகவரியும் | : |
| 10 | அவர் பணிபுரியும் நிறுவனத்தின் பெயர், முகவரி | : |
| 11 | அவர் செய்யும் பணியின் விவரம் மற்றும் மாத வருமானம் | : |

நான் வருட சந்தா ரூ.1/. செலுத்தியுள்ளேன் என்பதையும், பயிற்சி காலத்தில் மையத்தின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு ஒழுங்காக பயிற்சி பெறுவேன் என்றும் உறுதி அளிக்கிறேன்.

மனுதாரர் கையொப்பம்.

## பெற்றோர்/சகோதரர்/கணவர் உறுதிமொழி.

மனுதாரரின், தகப்பனார்/தாய்/கணவர்/சகோதரர்.................................................................... ஆகிய நான் மனுவில் சொல்லப்பட்ட நிறுவனத்தில் பணிபுரிகிறேன் என்றும், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு நடப்பு ஆண்டில் பணம் செலுத்தியுள்ளேன் என்றும், மனுவில் கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மை என்னும் உறுதி கூறுகிறேன்.

இடம்: கையொப்பம்
நாள்: (பெயர் ........................................................)

## நிறுவனத்தின் உறுதிமொழி

மேலே கையொப்பமிட்டுள்ள தொழிலாளர் திரு/திருமதி........................................................ எங்கள் அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றும், தொடர்ந்து தொழிலாளர் நல நிதி செலுத்துகிறார் என்றும், நடப்பு ஆண்டுக்குரிய தொழிலாளர் நல நிதி செலுத்தியுள்ளார் என்றும் மற்றும் மனுவில் கூறியுள்ள விவரங்கள் உண்மை என்றும் உறுதிமொழி கூறுகிறேன்.

தொழிலாளர் நலநிதிக்கு சென்ற ஆண்டிற்குரிய பணம் செலுத்திய விவரங்கள் கீழ்வருமாறு:.

காசோலை எண் ....................... நாள்....................... தொகை .......................
வாரிய ரசீது எண் ....................... நாள் .......................

இடம்:

நாள்:

அலுவலக முத்திரை: நிர்வாகி.

குறிப்பு:

| | |
|---|---|
| 1. | தொழிலாளர்களின் மனைவி, திருமணமாகாத சகோதரி மற்றும் மகள் மட்டுமே தையற்பயிற்சி வகுப்பில் சேர அனுமதிக்கப்படுவார்கள். |
| 2. | பயிற்சி பெறுவதற்கு வருட சந்தா ரூ.1/– தனியாகக் கட்டப்பட வேண்டும். |
| 3. | 8–வது வகுப்பில் தேறியிருக்க வேண்டும். |
| 4. | 16 வயது நிரம்பியிருக்க வேண்டும். |
| 5. | மாணவிக்கும், தொழிலாளிக்கும் உள்ள உறவு முறை தெரிவிக்காத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். |

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–600 006.

**தொழிலாளர் நல மையத்திலுள்ள குழந்தைகள் காப்பகத்தில் சேர விண்ணப்பம்.**

| | | |
|---|---|---|
| 1 | மையத்தின் பெயர் முகவரி | : |
| 2 | ஆண்டு | : |
| 3. | குழந்தையின் பெயர் ஆண்/பெண் | : |
| 4. | குழந்தையின் பிறந்த தேதி<br>(சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : |
| 5. | பெற்றோரின் பெயரும், முகவரியும் | : |
| 6. | அவர் பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் | : |
| 7 | அலுவலக முகவரி | : |
| 8. | அவர் செய்யும் பணி | : |
| 9. | மாத வருமானம் | : |

**பெற்றோர் உறுதிமொழி.**

மனுதாரர் ஆகிய நான் மனுவில் சொல்லப்பட்ட நிறுவனத்தில் பணிபுரிகிறேன் என்றும் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு நடப்பு ஆண்டில் பணம் செலுத்தியுள்ளேன் என்றும், மனுவில் கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மை என்றும் உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்.

**நிறுவனத்தின் உறுதிமொழி.**

மனுதாரர் திரு/திருமதி......……………………………………………..................எங்கள் அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றும் தொடர்ந்து தொழிலாளர் நல நிதி செலுத்துகிறார் என்றும், நடப்பு ஆண்டுக்குரிய தொழிலாளர் நல நிதி செலுத்தியுள்ளார் என்றும் மற்றும் மனுவில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்றும் உறுதிமொழி கூறுகின்றேன்.

தொழிலாளர் நல நிதிக்கு சென்ற ஆண்டிற்குரிய பணம் செலுத்திய விவரங்கள் கீழ்வருமாறு:

1. காசோலை எண் : …………………………….

2. தேதி : ……………………………..

3. எந்த ஆண்டுக்கு : …………………………….

4. தொகை : ……………………………..

5. வாரிய ரசீது எண் : …………………… நாள் ……………………

இடம்:

நாள்: நிர்வாகி.

**அலுவலக முத்திரை**

**குறிப்பு**

1) 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் மட்டுமே கண்டிப்பாக பாலர் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–600 006.

## மாணவர் பாடநூல் உதவித் தொகை பெற விண்ணப்பம்

1. மாணவரின் பெயர் :

2. அ) பெற்றோர் பெயர் (தொழிலாளர் நல நிதி செலுத்துபவரின் பெயர்) :

3. வீட்டு முகவரி :

4. பெற்றோர் பதவி மற்றும் வேலை பார்க்கும் நிறுவனத்தின் பெயரும், முகவரியும் :

5. மாணவர் படிக்கும் வகுப்பும், ஆண்டும் :

6. மாணவர் சென்ற ஆண்டு கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ளாரா? :

7. கல்வி நிலைய முகவரி :

8. தங்கள் சகோதர சகோதரிகள் யாராவது இத்திட்டத்துக்கு இந்த ஆண்டு விண்ணப்பித்துள்ளாரா? ஆம் எனில் விவரம், பெயர், வகுப்பு

9. தொழிலாளர் பணியாற்றும் நிறுவனத்தி டமிருந்து புத்தக உதவித் தொகை ஏதும் இலவசமாகப் பெற்றுக் கொண்டாரா?

10. ஆதிதிராவிடர் அல்லது பிற்பட்டோர் நலத்துறையிலிருந்தோ மற்ற அரசு துறையிலிருந்தோ இலவச பாடநூல்களோ அதற்குரிய தொகையோ பெற்றது உண்டா? ஆம் என்றால் அதன் விவரம்

11. மாணவரின் தேவைக்கு வாங்கப்பட்ட பாடநூல்களின் விவரம்

| வ.எண். | பாடநூலின் பெயர் | விலை ரூ. |
|---|---|---|

மொத்தம்

மாணவரின் கையொப்பம்.

**பெற்றோர் உறுதிமொழி**

இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவையும், சரியானவையும் ஆகும். அவற்றில் தவறுகள் ஏதேனும் இருந்தால் நான் வாரியத்திலிருந்து இத்திட்டத்தின் கீழ் பெற்றத் தொகையை எனது சம்பளத்திலிருந்து பணிபுரியும் நிறுவனத்தின் மூலம் திரும்ப வசூலித்துக் கொள்ள சம்மதிக்கிறேன்.

பெற்றோர் கையொப்பம்.

**கல்வி நிலையச் சான்றிதழ்**

| | |
|---|---|
| மாணவர் பெயர் | : |
| பெற்றோர் பெயர் | : |
| பயிலும் வகுப்பு | : |
| கல்வி நிலைய முகவரி | : |

இந்த மாணவர் சென்ற ஆண்டு தேர்ச்சி பெற்றுள்ளார் எனவும் வேறு எந்த அரசுத் துறையிலிருந்தோ, தனியார் துறையிலிருந்தோ பாடநூல்களோ அல்லது அதற்குரிய தொகையோ இக்கல்வி நிறுவனத்திற்கு தெரிந்த வரையில் பெறவில்லை எனச் சான்றளிக்கிறேன்.

நாள் :

இடம் :

பள்ளி/கல்லூரி முத்திரை தலைமையாசிரியர் / கல்லூரி முதல்வர்.

---

**தொழிலதிபர் சான்றிதழ்**

| | | | |
|---|---|---|---|
| தொழிலாளியின் பெயர் | : | | |
| பதவியின் பெயர் மற்றும் டோக்கன் எண் | : | | |
| மாத வருவாய் (சம்பளம், எல்லா படிகளும் உள்ளிட்ட மொத்த சம்பளத்தில்) | : | | |
| நிறுவன பெயரும், முகவரியும் | : | | |
| நடப்பு ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதி செலுத்திய விபரம் | : | | |
| கேட்பு வரைவோலை/ காசோலை எண் மற்றும் தேதி | தொகை | அனுப்பிய தேதி | வாரிய ரசீது எண், நாள் |
| | | | |

------------------தேதி முதல் இந்நிறுவனத்தில் இந்த தொழிலாளி பணிபுரிகிறார். அவர் மேற்பார்வை/மேற்பார்வை அல்லாத பிரிவைச் சார்ந்தவர் என்றும், அவரிடமிருந்து தொழிலாளர் நல நிதி பிடித்தம் செய்து மேற்சொன்னபடி வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது எனவும் சான்றளிக்கிறேன்.

மற்றும், மேற்படி தொழிலாளரால் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்றும், அவரது மகன்/மகள் இலவச புத்தக உதவித் தொகையோ அல்லது அதற்குரிய உதவித்தொகையோ இந்நிறுவனத்திடமிருந்து மற்ற எத்த துறையிலிருந்தும் எங்கள் மூலமாக பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் :

நாள் : கையொப்பம்.

அலுவலக முத்திரை சம்பந்தப்பட்ட நிறுவன அலுவலர்)

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை—600 006.

## கல்வி உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பம்

| | | |
|---|---|---|
| 1 | மனுதாரரின் பெயர் | : |
| 2. | தந்தையின் பெயர் (தொழிலாளியின் பெயர்) பணியின் பெயர் | : |
| 3. | வீட்டு முகவரி | |
| | 1. தற்போதைய முகவரி | : |
| | 2. நிரந்தமான முகவரி | : |
| 4. | 1. பயிலும் வகுப்பு, ஆண்டு மற்றும் பருவம் (செமஸ்டர்) | : |
| | 2. தற்போது பயிலும் கல்வி நிறுவன முகவரி | : |
| 5. | படிப்பின் மொத்த காலம் | …... ஆண்டு முதல்…. ஆண்டு வரை |
| 6. | முழுநேர கல்வியா ? பகுதி நேர கல்வியா ? | …. |
| 7. | பணியாற்றும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | : |
| 8. | அனைத்து படிகளும் சேர்ந்த மொத்த மாத ஊதியம் (சம்பளச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்). | : |
| | சம்பளம் | : |
| | பஞ்சப்படி | : |
| | இதரப்படிகள் | : |
| | போனஸ் | : |
| 9. | தந்தை/தாய் கடந்த ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதி செலுத்தியுள்ளாரா ? ஆம் எனில் வங்கியின் பெயர் காசோலை எண். நாள், தொகை மற்றும் இவ்வாரிய ரசீது எண் மற்றம் தேதி ஆகிய விவரங்கள் (கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும்) | : |
| 10. | மாணவர் கடந்த ஆண்டு படித்த பள்ளி/கல்லூரி முகவரி | : |
| 11. | கடந்த ஆண்டு படித்த வகுப்பு மற்றும் பருவம் | : |
| 12. | மாணவர் கடந்த ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெற்றாரா ? (ஆம் எனில் தேர்வு மதிப்பெண் சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 13. | கடந்த ஆண்டு மாணவர் உதவித் தொகை பெற்றாரா ? (ஆம் எனில் இவ்வாரிய ஆணை எண் மற்றும் நாள்) | : |
| 14. | மாணவரின் சகோதரர்/சகோதரி கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பித்துள்ளாரா ? (ஆம் எனில் அதன் விவரம்) | : |

**மாணவரின் உறுதிமொழி**

இந்த ஆண்டு மேற்குறிப்பிட்ட கல்வியைத் தொடர்வதற்கான மத்திய அல்லது மாநில அரசு அல்லது வேறு தனியார் நிறுவனங்கள் எவற்றின் மூலமாகவும் கல்வி உதவித் தொகையோ வேறு எந்த உதவித் தொகையோ நான் பெறவில்லை என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

மாணவரின் கையொப்பம்.

**பெற்றோரின் உறுதிமொழி**

எனது மகன்/மகள்................................ இம்மனுவில் குறிப்பிட்டிருக்கும் அத்தனையும் உண்மை என்றும் இதில் எந்த ஒரு புள்ளி விவரங்களோ, குறிப்புகளோ மறுக்கப்படவில்லை என்றும் இதில் உள்ள விவரங்களில் ஏதேனும் தவறு என்று நிரூபிக்கப்பட்டால் வாரியத்தின் மூலம் என் மகனுக்கு/மகளுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையைத் திருப்பி அளிப்பேன் என்றும் வாக்குறுதியளிக்கிறேன்.

பெற்றோரின் கையொப்பம்.

**கல்வி நிறுவன தலைவர் அளிக்க வேண்டிய விவரங்கள்.**

திரு....................................................தந்தையார் பெயர்............................................ இக்கல்வி நிறுவனத்தில்...............................வகுப்பில் பயின்று வருகிறார். இவர் இக்கல்வி ஆண்டில் கல்வி உதவித்தொகை பெற தகுதியுள்ளவர் என்றும், இக்கல்வி ஆண்டில் இவர் மத்திய மாநில அரசுகளிடமிருந்தோ தனியார் நிறுவனங்களிடமிருந்தோ எந்தவிதமான கல்வி உதவித் தொகையும் பெறவில்லை என்றும் இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

இடம் — கல்வி நிறுவன தலைவரின்
நாள் — கையொப்பம்.

**பணியளிப்பவர்/உரிமையாளரின் வாக்குறுதி.**

திரு................ அவரின் தந்தை/தாய் ................ இந்த நிறுவனத்தில் ஆக பணியாற்றுகிறார். இவர் கடந்த ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதியைச் செலுத்தியுள்ளார். கலம் 10ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரியானவை என்று உறுதியளிக்கப்படுகிறது.

இடம் — பணியளிப்பவர்/உரிமையாளரின்
நாள் — கையொப்பம்.
அலுவலக முத்திரை

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 006.

## கல்வி ஊக்கத் தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்

**1. மாணவர் பற்றிய விவரங்கள்.**

| | | |
|---|---|---|
| அ. | பெயர் | : |
| ஆ. | தந்தை பெயர் | : |
| இ. | தேர்ச்சி பெற்ற வகுப்பு | : |
| ஈ. | பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | : |
| உ. | கல்வி மாவட்டம் | : |
| ஊ. | அரசு பொதுத் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண் மற்றும் சதவீதம் | : |

**2. முகவரி**

| | | |
|---|---|---|
| அ. | தற்போதைய முகவரி | : |
| ஆ. | நிரந்தர முகவரி | : |

**3. மாணவரின் பெற்றோர் குறித்த விவரங்கள்** :

| | | |
|---|---|---|
| அ. | தந்தை/தொழிலாளர் பெயர் | : |
| ஆ. | பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | : |
| இ. | மாணவரின் பெற்றோர் கடந்த ஆண்டு தொழிலாளர் நல நிதி செலுத்தியுள்ளாரா ? செலத்திய விவரம். | : |
| 4. | மாணவரின் சகோதரர் /சகோதரிகள் வேறு யாரேனும் இக்கல்வி ஊக்கத் தொகைக்கு விண்ணப்பிக்கின்றனரா? ஆம் எனில் அதன் விவரம் | : |
| 5. | அருகாமையில் இருக்கும் கனரா வங்கி கிளையின் முகவரி | : |

**உறுதிமொழி**

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என இதன் மூலம் உறுதியளிக்கிறேன். மேலே அளிக்கப்பட்டிருக்கும் விவரங்களை தவறு என பின்னர் கண்டறியப்பட்டால் அளிக்கப்பட்ட கல்வி ஊக்கப் பரிசுத் தொகையை திரும்ப செலுத்திட உறுதியளிக்கிறோம்.

**பெற்றோர்/தொழிலாளர் கையொப்பம்.** **மாணவர் கையொப்பம்.**

## கல்வி நிறுவனச் சான்றிதழ்

திரு…………………………அவர்களின் மகன்/மகள்.......................................................................... இப்பள்ளியில்……………கல்வியாண்டில் 10/12 வகுப்பில் பயின்றார் எனவும், இவர் இப்பள்ளியில் மூலமே மார்ச்/ஏப்ரல் ……………. அரசு பொதுத் தேர்வினை எழுதினார் எனவும் இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது. மேலும் இப்பள்ளி ……………………………………கல்வி மாவட்டத்தில் உள்ளது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

இடம்:
நாள்:

**பள்ளி முத்திரை** **தலைமையாசிரியரின் கையொப்பம்**

## பணி அளிப்பவர் சான்றிதழ்.

செல்வன்/செல்வி..........................................................................................அவர்களின் தாய்/தந்தை திரு..................................................................இந்நிறுவனத்தில்...................................ஆக பணிபுரிகிறார். இவர்.....................–ம் ஆண்டுக்கு தொழிலாளர் நல நிதி நிறுவனத்தின் மூலம் செலுத்தியுள்ளார், காசோலை எண்...........................நாள்.................தொகை ரூ..................... வாரிய ரசீது எண்......................... நாள் ............................ எனச் சான்றளிக்கப்படுகிறது.

இடம்:
நாள்:

**அலுவலக முத்திரை** **பணியளிப்பவர் கையொப்பம்**

**குறிப்பு:**

1. விண்ணப்பிக்கும் மாணவர் பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொது தேர்வில்தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ண்ப்பத்துடன் 10/12 –ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல் ( சான்றளிக்கப்பட்டது) இணைக்கப்படவேண்டும்.
3. கல்வி மாவட்டப்பெயர் கண்டிப்பாக தெரிவிக்கவேண்டும்.
4. விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 31–ம் தேதி

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–600 006.
### கணினி அடிப்படை பயிற்சிக்கு உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பம்.

1. மாணவர் பற்றிய விவரங்கள் :
அ. மாணவர் பெயர் :
ஆ. பணிபுரியும் தொழிலாளியின் பெயர் :
இ. தேர்ச்சி பெற்ற வகுப்பு :
ஈ. பள்ளியின் பெயர் மற்றும் முகவரி :

உ. கணினி அடிப்படை பயிற்சி மற்றும் நிறுவன முகவரி :

ஊ. மாவட்டம் :

2. முகவரி
அ. தற்போதைய முகவரி :

ஆ. நிரந்தர முகவரி :

3. மாணவரின் பெற்றோர் குறித்த விவரங்கள் :
அ. தந்தை/தாய் (தொழிலாளர் )பெயர் :

ஆ. பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :
இ. அனைத்துப் படிகளும் சேர்ந்த மொத்த மாத ஊதியம் (சம்பளச் சான்றிதழ் பெறப்பட்டு சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்) :
சம்பளம் :
பஞ்சப்படி :
இதரப்படிகள் :
மொத்தம் :
ஈ. மாணவரின் பெற்றோர் கடந்த ஆண்டு தொழிலாளர் நல நிதி செலுத்தியுள்ளாரா ? நிறுவனத்தின் சான்று மற்றும் நிறுவனம் நலநிதிக்கு பங்களிப்புத் தொகை செலுத்திய வாரிய ரசீது எண் மற்றும் நாள்

4. மனுதாரர் தவிர குடும்பத்தில்/வேறு யாரேனும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கின்றனரா. ஆம் எனில் அதன் விவரம். :

5. மாணவர் இப்பயிற்சிக்காக செலுத்தியத் தொகை :

## **மனுதாரர் உறுதிமொழி.**

மேலே குறிப்பிட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என இதன் மூலம் உறுதியளிக்கிறேன். மேலே அளிக்கப்பட்டு இருக்கும் விவரங்கள் தவறு என பின்னர் கண்டறியப்பட்டால் அளிக்கப்பட்ட கணினி உதவித் தொகையை திரும்ப செலுத்திட உறுதியளிக்கிறோம்.

பெற்றோர்/தொழிலாளர்
கையொப்பம்.　　　　　　　　　　　　　　　　மாணவர் கையொப்பம்.

**கணினி நிறுவனச் சான்றிதழ்.**

திரு/திருமதி ………….அவர்களின் மகன்/மகள் /செல்வன்/செல்வி …………. இந்நிறுவனத்தில் ……………………….. முடிய………………… (பயிற்சியின் பெயர்) பயில்கின்றார் என இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

இடம்:
நாள்:　　　　　　　　　　　　　　　　　　　　கணினி நிர்வாகி.

கணினி நிலைய முத்திரை:

**நிறுவனத்தார் சான்று.**

செல்வன்/செல்வி……………………….. அவர்களின் தாய்/தந்தை திரு/திருமதி……………………….. இந்நிறுவனத்தில் ………………………..ஆக பணிபுரிகிறார். இவர்………………………..ஆண்டிற்கு தொழிலாளர் நல நிதி நிறுவனத்தின் மூலம் செலுத்தியுள்ளார். காசோலை எண்……………………….. நாள்……………………….. எனச் சான்றளிக்கப்படுகிறது.

இடம்:　　　　　　　　　　　　　　　　　　பணியளிப்பவர் கையொப்பம்
நாள் மற்றும் முத்திரை.

அலுவலக முத்திரை.

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–600 006.

**தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குழந்தைகளுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிலும் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்.**

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :
2. திருமணம் ஆனவரா (ஆம்/இல்லை) :
3. விண்ணப்பதாரரின் முழு/ நிரந்தர முகவரி :
4. தொழிலாளி பெயர் மற்றும் பதவி (தாய்/தந்தை) :
5. பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :
6. தொழிலாளியின் மாத வருமானம் (சம்பளச்சான்று இணைக்கப்பட வேண்டும்) :
7. தொழிலாளர் நல நிதி செலுத்துபவரா ஆம் எனில் அதன் விபரம் :
8. கல்விச் சான்று (Mark Sheets) தேர்வு மதிப்பெண் (புகைப்பட நகல் ஒப்பளிப்புடன் இணைக்கப்பட வேண்டும்) :
9. தட்டச்சு/சுருக்கெழுத்து பயிலும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :
10. பயிலும் நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்றதா ? ஆம் எனில் பதிவு எண். குறிப்பிடப்பட வேண்டும். :
11. அ) விண்ணப்பதாரர் எத்தனை மாதங்கள் பயின்றுள்ளார் பயிற்சிக் கட்டணம் தேர்வுக் கட்டணம் குறிப்பிடுக. :

    ஆ) தேர்ச்சி பெற்ற படிப்பின் பிரிவு :
12. மாணவர் தேர்வு எழுதிய நாள் மற்றும் பதிவு எண் குறிப்பிடுக (தேர்வு அசல் நுழைவுச்சீட்டு மற்றும் தேர்ச்சி பெற்றதற்கான சான்று நகல் சான்றொப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். :
13. தொழிலாளர் குடும்பத்தில் யாரேனும் ஏற்கனவே வாரியத்திலிருந்து இத்திட்டத்தில் உதவித் தொகை பெற்றாரா என்ற விபரம் :

**மாணவர் சான்று**

விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள யாவும் உண்மை மற்றும் சரியானவை எனச் சான்றளிக்கிறேன்.

**மனுதாரரின் கையொப்பம்.**

**பெற்றோரின் உறுதிமொழி**

விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட எனது மகன்/மகள்............................... முழுமையாக என்னைச் சார்ந்தவரென்றும், விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் சான்றளிக்கின்றேன்.

**பெற்றோரின் கையொப்பம்.**

**கல்வி நிலைய சான்று**

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கலம் 9, 10 மற்றும் 11–ல் தெரிவித்துள்ளவை யாவும் சரியானவை எனச் சான்றளிக்கப்படுகிறது.

**கல்வி நிலைய முத்திரை** **முதல்வர்/தலைமையாசிரியர்**
**ஒப்பம்.**

**நிறுவனத்தார் சான்று**

மாணவர்/மாணவி அவர்களின் தந்தை/தாய் திரு/திருமதி இந்த நிறுவனத்தில் ஆக பணிபுரிகிறார். இவர் ம் ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதியைச் செலுத்தியுள்ளார். மேலும் கலம் 7ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரியானவை என்று உறுதியளிக்கப்படுகிறது.

**இடம்**

**நிறுவனத்தார் கையொப்பம்**
**மற்றும் முத்திரை.**

**அலுவலக முத்திரை**

குறிப்பு:

1. தேர்ச்சி பெற்ற மாணவர் தகுந்த அத்தாட்சிகளுடன் தேர்வு எழுதிய 12 மாதங்களுக்குள் விண்ணப்பத்தல் வேண்டும்.
2. தொழிலாளியின் குடும்பத்தில் ஒருவருக்கு ஒருமுறை மட்டும் இத்திட்டம் பொருந்தும்
3. விண்ணப்பங்கள் யாவும் பணிபுரியும் நிர்வாகத்தின் மூலமாக அனுப்பப்பட வேண்டும்.

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–6.

## மூக்குக் கண்ணாடி வாங்கியதற்கான தொகையை மீளப்பெறுவதற்கான விண்ணப்பம்

1. தொழிலாளர் பெயர், பதவி மற்றும் டோக்கன் எண். :

2. நிரந்தர முகவரி :

3. தொழிலாளி பணிபுரியும் நிறுவனத்தின் பெயரும், முகவரியும் :

4. தொழிலாளி வாரியத்திற்கு நலநிதி செலுத்துபவரா ? (ஆம் / இல்லை) :

5. கண் மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட சான்றின் தேதி (சான்றின் அசல் இணைக்கவும்) :

6. கண்ணாடி வாங்கிய தேதி (ரொக்க பில் அசல் இணைக்கவும்) :

7. மாத வருமானம் (சம்பளச் சான்றிதழ் இணைக்கவும்) :

8. இதற்கு முன் வாரியத்திடமிருந்து கண்ணாடிக்கான தொகை பெறப்பட்டுள்ளதா ? (பணிக்காலத்தில் ஒருமுறை மட்டுமே இத்தொகை வழங்கப்படும். ஒருமுறைக்கு மேல் விண்ணப்பித்து தொகை பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவரிடமிருந்துஇத்தொகையை பிடித்தம் செய்ய நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். :

இடம்:

நாள்: தொழிலாளியின் ஒப்பம்.

## வேலையளிப்பவர் சான்று

1. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள திரு/திருமதி............................................ என்ற தொழிலாளி எமது நிறுவனத்தில் பணிபுரிகிறார். அவரது மாத மொத்தச் சம்பளம் ரூ. .................... என்றும் சான்றளிக்கப்படுகிறது.
2. விண்ணப்பதாரர் திரு/திருமதி ........................ இதற்கு முன் வாரியத்திடமிருந்து மூக்குக் கண்ணாடிக்கான தொகையை மீளப் பெறவில்லை என்று சான்றளிக்கப்படுகிறது.
3. மேற்படி தொழிலாளர் நல வாரியத்திற்கு கடந்த ஆண்டில் ரூ. ............. தொழிலாளர் நலநிதியாக செலுத்தியுள்ளார் என்றும், இத்தொகையை காசோலை/கேட்பு வரைவோலை எண். .........., நாள்........, ரூ. ........... எடுக்கப்பட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது என்றும் சான்றளிக்கப்படுகிறது. ரசீது எண். ..........., நாள் ..............
4. மேலும், தொழிலாளிக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம் இந்நிறுவனத்தில் நடைமுறையில் இல்லை எனவும் சான்றளிக்கப்படுகிறது.
5. ரொக்கப் பில்லில் கடைக்காரரின் முழு கையொப்பம் இருத்தல் அவசியம்.

இடம்:

நாள்:

வேலையளிப்பவரின் ஒப்பம்
மற்றும் முத்திரை.

அலுவலக முத்திரை:

**குறிப்பு—**

1. முன்பண ரசீது விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
2. விண்ணப்பதாரரின் மாத மொத்த ஊதியம் ரூ.10,000/—திற்குள் இருத்தல் வேண்டும். (அனைத்து படிகளும் சேர்த்து பேனஸ் நீங்கலாக)
3. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி —
   "செயலாளர்,
   தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்,
   த.பெ.எண்.718, தேனாம்பேட்டை, சென்னை—600 006.
4. ரொக்கப் பட்டியலின் பின்புறம் Paid by me என தொழிலாளி கையொப்பம் இடப்பட வேண்டும்.

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 006.

## தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குழந்தைகளுக்கு காதுகேட்கும் கருவி வாங்கியதற்கான தொகையை மீளப் பெறுவதற்கான விண்ணப்பம்.

| | | |
|---|---|---|
| 1. | காதுகேளாதவர் பெயர் (பெரிய எழுத்துக்களில்) | : |
| 2. | வயது | : |
| 3. | முகவரி | : |
| 4. | தொழிலாளர் பெயர்(ம)வகிக்கும் பதவி டோக்கன் எண். | : |
| 5. | தொழிலாளர் பணிபுரியும் நிறுவன முகவரி | : |
| 6. | தொழிலாளர் நல நிதி செலுத்துபவரா?ஆம் எனில் எந்த வருடம் வரை செலுத்தப்பட்டுள்து | : |
| 7. | தொழிலாளருடன் காது கேளாதவருக்கு உள்ள உறவுமுறை (தனக்கு/மகன்/மகள்) | : |
| 8. | மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட ஆடியோகிராமின் தாள் (அசல் இணைக்கவும்) | : |
| 9. | காதுகேட்கும் கருவி வாங்கிய நாள் (அசல் ரொக்கப்பட்டியல் இணைக்கப்பட வேண்டும்) | : |
| 10. | தொழிலாளரின் மாத வருமானம் (சம்பளச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும், மாத வருமானம் ரூ.10,000/—க்கு மிகாமல் இருக்க வேண்டும்) | : |
| 11. | இதற்கு முன் வாரியத்திலிருந்து காதுகேட்கும் கருவியோ அல்லது அதற்கான உதவித்தொகையோ பெறப்பட்டுள்ளதா (ஆம் எனில் அதன் விவரம்) | : |

இடம் :

நாள்: தொழிலாளியின் ஒப்பம்.

## வேலையளிப்பவர் சான்றிதழ்

திரு/திருமதி என்பவர் எங்கள் நிறுவனத்தில் ஆக பணிபுரிகிறார். இவர் ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதிச் செலுத்தியுள்ளார். அன்னாரின் பங்குத் தொகை மொத்தத் தொகை ரூ. உடன் சேர்த்து காசோலை
எண். நாள். வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கான வாரிய இரசீது எண். நாள். எனவும் சான்றளிக்கப்படுகிறது.

இடம்–

வேலையளிப்பவர் ஒப்பம் மற்றும் முத்திரை.

நாள்–

## மருத்துவர் சான்றிதழ்

டாக்டர் பதிவு எண். ஆகிய நாள் அன்று கீழ்கண்ட தொழிலாளரை பரிசோதித்தேன்.

1) காதுகேளாதவர் பெயர் –
2) பணிபுரியும் நிறுவனம் பெயர் –
3) அடையாள குறிகள் –
4) காதுகேளாமை இயற்கையானதா அல்லது விபத்தினாலானாதா ? –
5) காதுகேளாத் தன்மைக் குறித்த விவரம் –
6) எந்தவகையான காதுகேட்கும் கருவி உபயோகிக்க வேண்டும் –

இடம்–

நாள்– மருத்துவர் ஒப்பம் மற்றும் முத்திரை.

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 006.

**உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு மற்றும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மூன்று சக்கரவண்டி வழங்குதல் மற்றும் செயற்கை உறுப்பு உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்.**

1. பயனாளியின் பெயர் :
2. தொழிலாளர் பெயர்/பதவி/பயனாளரின் உறவுமுறை :
3. பணிபுரியும் நிறுவனம், அதன் முகவரியும் :
4. உதவி வேண்டுவோர் பெயர்
5. அவருக்கு தொழிலாளருடன் உள்ள உறவுமுறை
6. தொழிலாளர் ஆண்டுதோறும் நல நிதி செலுத்துகிறாரா ? :
7. விண்ணப்பதாரர் வேறு எந்த வழியிலாவது செயற்கை உறுப்பு பெற்றிருக்கிறாரா? ஆம் எனில் விவரம் தெரிவிக்கவும் :
8. தொழிலாளரின் மாத வருமானம் (Salary Certificate) இணைக்க வேண்டும் :

**சான்று**

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையென இதன்மூலம் சான்றளிக்கிறேன்.

**தொழிலாளர் ஒப்பம்.**

## நிர்வாகச்சான்று

மேலே குறிப்பிட்டுள்ள எமது நிர்வாகத்தில் பணிபுரியும் தொழிலாளர் திரு. ……………… ஆம் ஆண்டுக்குரிய தொழிலாளர் நல நிதி காசோலை எண்………………நாள்:……………… தொகை ரூ………………செலுத்தியுள்ளார் எனவும், அவர் வேறு எந்த வழியிலும் இதற்கு முன் செயற்கை உறுப்பு பெறவில்லை எனவும் சான்றளிக்கிறேன்.

**அலுவலக முத்திரை** **நிர்வாகியின் ஒப்பம் மற்றும் முத்திரை**

**மருத்துவச் சான்று**

விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள தொழிலாளி/தொழிலாளியின் குழந்தை……………………………………………க்கு கீழ்கண்ட செயற்கை உறுப்பு இன்றியமையாத தேவை என்று இதன் மூலம் சான்றளிக்கிறேன். தேவையான செயற்கை உறுப்பின் விவரங்கள்.

**முத்திரை:** **மருத்துவர் ஒப்பம் மற்றும் முத்திரை**

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 006.

**ஈமச்சடங்கு உதவித்தொகை கோரும் விண்ணப்ப படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணிக்காலத்தில் இறந்த பணியாளரின் பெயர் மற்றும் பதவி. (மணமானவரா/மணமாகதவரா மற்றும் வயது) | : | |
| 2. | இறந்த தேதி | : | |
| 3. | அன்னார் பணி செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | : | |
| 4. | அன்னார் நடப்பு ஆண்டில் நல நிதி செலுத்தியவரா | : | |
| 5. | வாரிசுதாரர் பெயர் மற்றும் முகவரி | : | |
| 6. | இறந்தவருக்கு வாரிசுதாரரின் உறவுமுறை | : | |
| 7. | நிறுவனம் வாரிசுதாரருக்கு ஈமச்சடங்கு தொகை அளித்துவிட்டு அதற்கான முன்பண ரசீது இணைக்கப்பட்டுள்ளதா அல்லது வாரிசுதாரரால் ஈமச்சடங்கு தொகை பெற முன்பண ரசீது இணைக்கப்பட்டுள்ளதா | : | |
| 8. | இறந்த பணியாளரால் கடைசியாக பெறப்பட்ட சம்பளச்சான்று | : | |
| 9. | நிறுவன உரிமையாளர்/ சங்கப் பிரதிநிதியின் ஒப்பம் | : | |

Ïஇடம்:

நாள்: வாரிசுதாரர் கையொப்பம்.

**சான்று**

பணிக்காலத்தில் இறந்த திரு/திருமதி

அவரின் நல நிதி இந்நிறுவனத்தின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது என சான்றளிக்கிறேன்.

செலுத்திய வருடம் ………… காசோலை/கேட்புவரைவோலை எண்................

நாள்:………… மொத்த தொகை ரூ..................(வாரிய ரசீது எண். நாள்: )

**அலுவலக முத்திரை:** **உரிமையாளரின் ஒப்பம்.**

**குறிப்பு:**

1. இறப்புச் சான்று, முன்பண ரசீது, வாரிசுதாரர் சான்று, மற்றும் சம்பளச் சான்று (வரிசை எண்.9–ன்படி ஆகியவை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

2. மேற்படி விண்ணப்பம் சரியான முறையில் பூர்த்தி செய்து இணைப்புகளுடன் “செயலாளர், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை–600 006. த.பெ.எண்.718.” என்ற முகவரிக்கு பணியாளர் இறந்த ஆறு மாதத்திற்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை—6.
## திருமண உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பம்

1. தொழிலாளியின் பெயர் :

2. முழு முகவரி (அஞ்சல் குறியீட்டுடன்) :

3. பணி புரியும் நிறுவனத்தின் பெயர் & முழு முகவரி (அஞ்சல் குறியீட்டுடன்) :

4. கடந்த ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதி செலுத்திய விவரம். : காசோலை எண் நாள் தொகை

5. தொழிலாளியின் மாத மொத்த ஊதியம் (ஊதியச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) :

6. தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் விவரம்.— (குடும்ப அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்) :

| வ எ. | பெயர் | வயது | தொழிலாளியுடன் உறவு முறை | திருமண நிலை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

7. திருமண உதவித் தொகை யாருக்காக கோரப்படுகிறது. (தனக்கு/மகன்/மகள்) :

8. அ) மணமகன் பெயர் :

   ஆ) பிறந்த தேதி (ம) வயது (சான்றிதழ் இணைக்கவும்) :

9. அ) மணமகள் பெயர் :

   ஆ) பிறந்த தேதி (ம) வயது (சான்றிதழ் இணைக்கவும்) :

10. திருமணம் நடைபெற்ற நாள் (அசல் திருமண அழைப்பிதழ் இணைக்கவும்) :

11. திருமணம் நடைபெற்ற இடம் — முழு முகவரியுடன் (பதிவுத் திருமணம்/ திருமண மண்டபம்/வழிபாட்டுத் தலம்/ :

இல்லம் (துக்க சான்றிதழ் இணைக்கவும்)

**12.** தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திலிருந்தோ அல்லது தமிழ்நாடு கட்டுமானம்/உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியத்திலிருந்தோ (அ) சமூக நலத் துறையிலிருந்தோ (அ) அரசின் இதர நலத் திட்டங்கள் மூலமோ இதற்கு முன் திருமண உதவித் தொகை பெற்றுள்ளீர்களா (அ) விண்ணப்பித்து உள்ளீர்களா ? (ஆம் எனில் விவரம்). :

## விண்ணப்பதாரரின் உறுதிமொழி

நான் திருமண உதவித் தொகை வேறு எந்தவொரு தொழிலாளர் நல வாரியம் மூலமாகவோ (அ) அரசின் இதர நல வாரியங்களின் மூலமாகவோ (அ) அரசின் திட்ட உதவிகள் மூலமாகவோ பெறவில்லை எனவும் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை எனவும் இவ்விவரங்கள் தவறு என பின்னர் தெரிய வந்தால் எனக்கு வழங்கப்பட்ட திருமண உதவித் தொகையினை முழுவதுமாக திரும்ப செலுத்தி விடுகிறேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள்.— விண்ணப்பதாரர் கையொப்பம்.

## வேலையளிப்பவரின் உறுதிமொழி

திரு இந்நிறுவனத்தில் ஆக பணிபுரிகிறார். இவருக்கு ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதி காசோலை எண் நாள் தொகை ரூ. வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது. மேற்படி தொழிலாளிக்கு/ தொழிலாளியின் மகளுக்கு / தொழிலாளியின் மகனுக்கு அன்று என்ற இடத்தில் திருமணம் நடைபெற்றது எனவும் இவர் இதற்கு முன்னர் திருமண உதவித் தொகை கோரி இந்நிறுவனம் மூலம் எந்த ஒரு அரசுத் துறை அல்லது நல வாரியங்களுக்கு விண்ணப்பிக்கவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

இடம்.— நிறுவனத்தார் கையொப்பம்.
நாள்.—
அலுவலக முத்திரை.—

## திருமண உதவித் தொகை பெறுவதற்கான நிபந்தனைகள்

1. தொழிலாளர் அவர் பணிபுரியும் நிறுவனம் மூலம் கடந்த ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதி செலுத்தியவராக இருத்தல் வேண்டும்.
2. தொழிலாளியின் மாத மொத்த ஊதியம் ரூ.15,000/—க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. மணமகன் 21 வயதும் மணமகள் 18 வயதும் பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும்.
4. சமூக நலத் துறை மூலமோ அல்லது வேறு இதர நல வாரியங்கள் மூலமோ திருமண உதவித் தொகை பெற்றவராக அல்லது விண்ணப்பித்தவராக இருக்கக் கூடாது.
5. ஒரு திருமணத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து **மூன்று மாதங்களுக்குள்** விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

## விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

1. மணமகன் மற்றும் மணமகளின் சான்றொப்பமிடப்பட்ட வயது சான்றிதழ் நகல் (பிறப்பு சான்றிதழ்/பள்ளி இறுதிச் சான்றிதழ்/அரசால் வழங்கப்படும் ஏனைய வயது சான்றிதழ்).
2. அசல் திருமண அழைப்பிதழ்.
3. சான்றொப்பமிடப்பட்ட குடும்ப அட்டை நகல்.
4. திருமணம் மண்டபத்தில் நடைபெற்றிருந்தால் திருமண மண்டப அசல் ரசீது அல்லது வழிபாட்டுத் தலங்களில் நடைபெற்றிருந்தால் வழிபாட்டுத் தல அசல் ரசீது அல்லது இல்லத்தில் நடைபெற்றிருந்தால் கிராம நிர்வாக அலுவலரின் அசல் சான்றிதழ் அல்லது பதிவுத் திருமணமாக இருந்தால் சான்றொப்பமிடப்பட்ட திருமண பதிவுச் சான்றிதழ் நகல்.
5. தொழிலாளியின் மாத ஊதியச் சான்றிதழ்.
6. வ.எண் 7ல் குறிப்பிட்டுள்ள நபர் ஆணாக இருப்பின் ரூ.3000/—ம், பெண்ணாக இருப்பின் ரூ.5000/—க்கான முன்பண ரசீது.

**குறிப்பு.— விண்ணப்ப படிவம் வேண்டுவோர் நேரில் அல்லது சுயவிலாசமிட்ட ரூ.5/— தபால்தலை ஒட்டிய உறை மூலம் பெற்றுக் கொள்ளலாம்.**

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி.—**

செயலாளர்,
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்,
தபால் பெட்டி எண் 718, டி.எம்.எஸ். வளாகம்,
தேனாம்பேட்டை, சென்னை—600 006.

* * * *